[2002 ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2002 ஏப்ரல் 17] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள் 2002-2003, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 33 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 40 - ஊரக வளர்ச்சித் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும், வாக்கெடுப்பும். திரு.டி.கே. இராஜா.

திரு. டி.கே. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சித் துறை மானிய கோரிக்கைகளில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி. எங்களை வாழவைத்து, வழிநடத்திக்கொண்டிருக்கின்ற சமூக நீதிக் காவலர் டாக்டர் ஐயா அவர்களுக்கு நன்றி கூறி பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கருத்தை நான் பதிவு செய்கிறேன்.

தமிழகத்தில் தற்போதுள்ள 6.2 கோடி மக்களில் 3.4 கோடி மக்கள் அதாவது 56 சதவிகித மக்கள் கிராமப் பகுதியிலே வசிக்கிறார்கள். இங்குதான் பொருளாதாரத்தின் முதுகெலும்பான விவசாயம், நெசவு, கால்நடைத் துறை, மீனளம், நீர்ப்பாசனம், சுரங்கம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இத்தொழில்களையே மிகுதியான பேர் நம்பி வாழ்ந்து கொண்டிக்கின்றனர். இவர்களுடைய வாழ்க்கை வளம் பெற்றால்தான், தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாக திகழ முடியும். இன்னும்